தகவல் ஏடு

# my health app

## ‘மை ஹெல்த்’ செயலி (my health app) என்பது என்ன?

உங்களுடைய மொபைல் தொலைபேசி அல்லது சாதனத்தைப் பயன்படுத்தி ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record) தகவல்களை அணுகிப் பெறும், தரவிறக்கம் செய்யும், இருப்பில் வைக்கும் மற்றும் பகிர்ந்துகொள்ளும் வசதியை **‘மை ஹெல்த்’** (**my health**) செயலி உங்களுக்கு அளிக்கிறது. **‘மை ஹெல்த்’** (**my health**) செயலியைப் பயன்படுத்த உங்களுக்கு இண்ட்டெர்நெட் இணைப்பு ஒன்று தேவைப்படும்.

## ‘மை ஹெல்த்’ செயலி (my health app)-யின் பயன்கள் யாவை?

- ‘என் சுகாதாரப் பதி’(My Health Record)வில் உள்ள தகவல்களைப் பாதுகாப்பான முறையில் அணுகிப் பெறவும், பார்க்கவும் **‘மை ஹெல்த்’** (**my health**) செயலியை நீங்கள் பயன்படுத்தலாம்.
- **‘மை ஹெல்த்’** (**my health**)-இன் முகப்புப் பக்கத்தில் காணப்படும் ‘தலைப்புத் துண்டு’(tile)கள் விரைவாகவும், எளிதாகவும் தகவல்களைக் கண்டறிய உங்களுக்கு உதவும்.
- **‘மை ஹெல்த்’** (**my health**) மருத்துவ வரலாற்றுக் காலக்கோடு உங்களுடைய மருத்துவ வரலாற்றினை விரைவாகவும், எளிதாகவும் அணுகும் வசதியை உங்களுக்கு அளிக்கிறது.
- வருடம் மற்றும் பிரிவு ஆகியவற்றைக் கொண்டு தகவல்களை நீங்கள் வடிகட்டலாம்.
- உலகலாவிய வகையில் இண்ட்டெர்நெட் வசதி உள்ள இடங்களில் **‘மை ஹெல்த்’** (**my health**) செயலி இயங்கும்.

## ‘என் சுகாதாரப் பதி’(My Health Record)வின் அனைத்து அம்சங்களும் இந்த செயலியில் கிடைக்குமா?

சில அம்சங்கள் ஒரே மாதிரியானவை. ‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record) (‘மை-கவ்’ (myGov) வழியாக) மற்றும் **‘மை ஹெல்த்’ (my health)** ஆகிய இரண்டிலும் முக்கியமான சுகாதாரத் தகவல்களை நீங்கள் பார்வையிடலாம். மருத்துவ ஆவணங்கள், ‘மெடிகெயர்’ ஆவணங்கள் மற்றும் நீங்கள் சேர்த்துள்ள முக்கியமான தகவல்கள் ஆகியன இதில் உள்ளடங்கும். யாரவதொருவருக்காக நியமிக்கப்பட்டுள்ள அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிரதிநிதியாக நீங்கள் இருந்தால், அவருடைய பதிவையும் நீங்கள் பார்வையிடலாம்.

இருப்பினும், **‘மை-ஹெல்த்’** (**my health**)-ஐப் பயன்படுத்தி தகவல்களைச் சேர்க்கவோ, சில பதிவுச் செயல்பாட்டு முறைகளை நிர்வகிக்கவோ தற்சமயம் உங்களால் இயலாது. தகவல்களைச் சேர்க்க அல்லது உங்களுடைய பதிவுச் செயல்பாட்டு முறைகளை நிர்வகிக்க, ‘மை-கவ்’ (myGov) மூலமாக ‘என் சுகாதாரப் பதி’(My Health Record)வை நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

## இந்த செயலியில் உள்ள பாதுகாப்பு அம்சங்கள் யாவை?

**‘மை-ஹெல்த்’** (**my health**)-பாதுகாப்பானதொரு செயலி, உங்களுடைய சாதனத்திலுள்ள பாதுகாப்பு அம்சத்திற்கு மேலாக, பாதுகாப்பானதொரு 6-இலக்க ‘அடையாளக் குறியீட்டு எண்’(PIN)ணை நீங்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம். மற்றவர்களுடன் உங்களுடைய சாதனத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு முன்பாக, உங்களுடைய செயலியை விட்டு நீங்கள் வெளியேற வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களுடைய தகவல்களின் அந்தரங்கத் தன்மை மற்றும் பாதுகாப்பினைக் காக்க இது உதவும்.

**‘மை-ஹெல்த்’** (**my health**)- செயலியின் பாதுகாப்பைப் பற்றிய கவலைக் கரிசனம் ஏதும் உங்களுக்கு இருந்தால், உங்களுடைய ‘அடையாளக் குறியீட்டு எண்’(PIN)ணை நீங்கள் நீங்கள் உடனடியாக மாற்றிவிட வேண்டும். இந்த செயலியின் ‘அக்கவுண்ட்’ (account) பக்கத்தில் உங்களுடைய ‘அடையாளக் குறியீட்டு எண்’(PIN)ணை நீங்கள் மாற்றலாம். 5 நிமிடங்களுக்கு நீங்கள் உங்களுடைய செயலியைப் பயன்படுத்தாமல் இருந்தால், **‘மை-ஹெல்த்’** (**my health**) தானாகவே உங்களை இந்தச் செயலியிலிருந்து வெளியேற்றிவிடும்.

## ‘**மை-ஹெல்த்**’ செயலி(**my health** app)யைப் பயன்படுத்தி எவற்றை நான் தரவிறக்கம் செய்யலாம் மற்றும் பகிர்ந்துகொள்ளலாம்?

‘என் சுகாதாரப் பதி’(My Health Record)வில் இருந்து உங்களுடைய மொபைல் தொலைபேசிக்கு உங்களுடைய ஆவணங்களைத் தரவிறக்கம் செய்ய **‘மை-ஹெல்த்’** (**my health**) செயலி உங்களை அனுமதிக்கும். தடுப்பூசியேற்றச் சான்று ஆவணங்கள், மற்றும் இரத்த சோதனை முடிவுகள் போன்ற மருத்துவ ஆவணங்கள் போன்ற உருப்படிகளை நீங்கள் தரவிறக்கம் செய்யலாம். இவற்றை நீங்கள் உங்களுடைய தொலைபேசியில் சேமித்துக்கொள்ளலாம். மற்ற நபர்கள் மற்றும் அமைப்புகளுடன் ஆவணங்களைப் பகிர்ந்துகொள்ளவும் **‘மை-ஹெல்த்’** (**my health**) உங்களை அனுமதிக்கும். பகிர்ந்துகொள்வதற்காக இந்த செயலியை நீங்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு முறையும் ‘சடுதித் தோற்ற அறிவிப்பு’ (pop-up notification) ஒன்றை நீங்கள் பெறுவீர்கள். உங்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் பொழுது நீங்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்பதை இது உங்களுக்கு நினைவூட்டும்.

## ‘**மை-ஹெல்த்**’ செயலி(**my health** app)யை நான் எங்கிருந்து பெறலாம்?

‘கூகுள் ப்ளே’ (Google Play) (‘ஆன்ட்ராய்ட்’ சாதனங்களுக்கு), அல்லது ‘ஆப்-ஸ்டோர்’ (App Store) (‘ஆப்பிள்’ சாதனங்களுக்கு) ஆகியவற்றில் தேடல்களை மேற்கொண்டு இந்த செயலிய நீங்கள் தரவிறக்கம் செய்யலாம். இச் செயலியைத் தரவிறக்கம் செய்ய இந்த ‘க்யூ-ஆர் குறியீ’(QR code)ட்டினை ‘ஸ்கேன்’ செய்யுங்கள்.

## கூடுதல் மூலவளங்கள் மற்றும் ஆதரவுதவி

**‘மை-ஹெல்த்’ (my health)** வலைப்பக்கம்: www.digitalhealth.gov.au/myhealth

‘மை-ஹெல்த்’ (my health) செயலி இணையவழிக் கல்வி: https://training.digitalhealth.gov.au/mod/page/view.php?id=1035

‘என் சுகாதாரப் பதிவு’ (My Health Record) உதவித் தொலைபேசி இணைப்பு

1800 723 471 (தெரிவு 1), நாளுக்கு 24 மணி நேரமும் வாரம் 7 நாட்களும் கிடைக்கும்.

‘ஆஸ்திரேலிய டிஜிட்டல் ஹெல்த் ஏஜென்சி’ தொடர்புப் படிவம்:
www.digitalhealth.gov.au/contact-us

‘மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை’
131 450
www.tisnational.gov.au/Help-using-TIS-National-services/Contact-TIS-National

‘நேஷனல் ரிலே சர்வீஸ்’

1300 555 727
www.accesshub.gov.au